# ஒழுக்கநெறிக் கோவை

*"நாங்கள் ஒவ்வொருவரும் பால்நிலை நீதிக்கான விழுமியங்களுக்கு மதிப்பளித்து வாழ்தல் அவசியமாகும்.[1]"*

தனிநபர்கள் மற்றும் தலைவர்கள் என்ற ரீதியில், எமது நடத்தைகளில் MenEngage Alliance இன் கோட்பாடுகள் மற்றும் பணிக்கூற்றுக்கள் பிரதிபலித்தல் வேண்டும். இவ் ஒழுக்கநெறிக் கோவைப் படிவங்கள் எமது பொறுப்புக் கூறல் வேலைச் சட்டகத்துடன், அடிப்படை கோட்பாடுகள் மற்றும் பொறுப்புக் கூறல் நியமங்களுடன் ஒன்றிணைந்த பகுதியாகும். இவ் ஒழுக்கநெறிக் கோவை தனிநபர் நடத்தைகள் மீது கவனம் செலுத்துவதுடன், அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் பொறுப்புக் கூறல் நியமங்கள் எமது கூட்டு நம்பிக்கைகள் மற்றும் பொறுப்புக் கூறல் முறைமைகள் மற்றும் நடைமுறைகளில் அதிக கவனத்தை செலுத்துகின்றது.

இவ் ஒழுக்கநெறிக் கோவை பிரதேச, தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் MenEngage Alliance இன் அங்கத்தவர்களின் விழுமியங்களைப் பிரதிபலிக்கின்றதுடன், தொடர்ச்சியான கற்றல்கள் மூலம் தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளல், தவறுகளை நிவர்த்தி செய்து கொண்டு மூலம் வாழ முயற்சிக்க வேண்டுமென்பதை எடுத்துக் கூறுகின்றது.

இவ் ஒழுக்கநெறியானது, ஒரு நாட்டில், பிராந்தியத்தில் மற்றும் உலகளாவிய ரீதியான MenEngage Alliance இன் அனைத்து அங்கத்தவர்களுக்கும் ஏற்புடையதாகும். MenEngage Alliance இற்கு சர்வதேச பணிப்பாளர் சபை மற்றும் சர்வதேச செயலகமும் உண்டு. உள்ளக பயிற்சிக்காலப் பணியாளர்கள் மற்றும் மதியுரைஞர்கள் உள்ளிட்ட, குறித்த எந்தவொரு நிறுவனமும் இவ் ஒழுக்கநெறிக் கோவையில் கையொப்பமிட்டுக் கடைப்பிடிக்க வேண்டும்.

**அங்கத்தவர்கள் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படும் விழுமியங்கள் மற்றும் நடத்தைகள்**

1. மதிப்பும் கருணையும்

நாம் ஒருவருக்கு ஒருவர் மதிப்பளித்து, பாதுகாத்து, கருணையுடன் செயலாற்றுவதுடன், மற்றவர்கள் எமக்கு எவ்வாறு பரிகாரம் செய்ய வேண்டுமென விரும்புகின்றோமோ, அதேபோல் மற்றவர்களுக்கும் நாம் பரிகாரம் செய்வோம். எமது செயற்பாடுகள் முதன்மை விடயமாக அமையாததுடன், அதன் மூலம் ஏற்படும் விளைவுகள் எந்தளவுக்கு உணரப்படுகின்றது மற்றும் அனுபவிக்கப்படுகின்றது என்பதே முக்கியமானதாகும். நாம் ஒத்துணர்வுடனும் மற்றும் புரிந்துணர்வுடனும் மற்றவர்களை முனைப்பாக செவிமடுத்தல் வேண்டும். எமக்கு அதில் உடன்பாடு இல்லாவிடினும், அவர்களுடைய கண்ணோட்டங்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

[1] MenEngage Alliance இன் டெல்லி பிரகடனம் மற்றும் செயற்பாட்டுக்கான உடனடி அழைப்பு (2014)

எங்களுடன் முரண்படுபவர்களை நாங்கள் நேரடியாகவும் மதிப்புடனும் அணுகுகின்றோம். அல்லது பிரச்சினையை ஆக்கபூர்வமான முறையில் தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்புக்களை நாடுகின்றோம். மற்றவர்களுடைய பலங்களைப் பாராட்டவும், மற்றும் மற்றவர்களின் எல்லைகளை ஏற்றுக் கொள்வதற்கு முனைகின்றோம். பயனுள்ள பின்னூட்டல்களைப் வழங்கவும், மற்றும் தவறுகளிலிருந்து கற்றுக் கொள்வதற்கும் முயற்சிக்கின்றோம்.

மற்றவர்களுடன் எமது உறவுமுறைகளைப் பேணும் போதுள்ள சமநிலையற்ற அதிகாரம் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும். குறித்த வித்தியாசங்களிலிருந்து அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு நாங்கள் முயற்சிப்பதுடன், மற்றும் அதிகாரச் சமநிலையான உறவுமுறைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கின்றோம்.

நாம் மனிதர்கள் என்ற வகையில் ஒவ்வொருவருக்கும் காட்டுகின்ற மதிப்புக்கு அப்பால், நாங்கள் வாழ்கின்ற சூழலின் ஒரு பகுதியாகவுள்ள ஏனைய விலங்குகள், தாவரங்கள், காற்று, நீர், மண், மற்றும் கனியுப்புக்கள் உள்ளடங்கிய புவிச்சமூகத்திற்கும் மதிப்பளித்தல் வேண்டும்.

2. உறுதியான விருப்பு ஒப்புதல்

மற்றவர்களுடன் தொடர்புகளைப் பேணும் போது முழுமையாக விபரமறிந்து வழங்கும் விருப்பு ஒப்புதலை உறுதிப்படுத்துகின்றோம். அதிகார ஏற்றத்தாழ்வுகள் சிலவேளைகளில் விருப்பு ஒப்பதல்களை சமரசம் செய்யக்கூடும் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். பால்நிலை, குறைவான அதிகாரம் அல்லது சமுதாயப் படிநிலை அல்லது வளப்பற்றாக்குறை ஆகியன, குறைந்த அதிகாரத்தைக் கொண்டிருக்கும் தனிநபர் ஒருவர் அல்லது குழுவொன்று சுதந்திரமாக முடிவெடுப்பதைத் தடுக்கலாம்.

நாங்கள் மற்றவர்களின் பிரத்தியேகத்திற்கு மதிப்பளிப்பதுடன், வெளிப்படையான அனுமதியின்றி மற்றவர்களின் தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தாமல் இருப்போம்.

பாலியல் மற்றும் வேறெந்த நெருங்கிய தொடர்புகளின் போது, மற்றய தரப்பினர் சுதந்திரமாகவும் சுயமாகவும் உடன்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், மற்றும் உறுதியான விருப்பு ஒப்புதலைப் பெறுவதற்கும் நாம் கடப்பட்டுள்ளோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது விருப்பு ஒப்புதலை மீளப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை மக்களுக்கு உண்டென்பதை நாம் அறிவோம். ஏதேனுமொரு நபர் தங்கி வாழ்பவரோ, போதையிலோ, சுயநினைவில்லாமலோ, உளநல அறிவாற்றல் குறைபாட்டால் பீடிக்கப்பட்டவரோ அல்லது ஒரு சிறுவராயின் அவர்களுக்கு தெளிவான விருப்பு ஒப்புதலை வழங்க முடியாது என்பதை நாம் அறிவோம்[2].

[2] MenEngage இன் சிறுவர்கள் மற்றும் கட்டிளம் பருவத்தினரின் பாதுகாப்புக்கான கொள்கையில் 18 வயதுக்குக் குறைந்த எந்தவொருவரும் சிறுவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது.

3. நியாயம் மற்றும் சமத்துவம்

நாம் மற்றவர்களுடன் நியாயமாகவும் சமத்துவமாகவும் நடந்து கொள்கின்றோம். ஒவ்வொரு நபர்களின் சமமான மனிதத்துவம், உரிமைகள் மற்றும் மேன்மையை மறுதலித்து, மற்றவர்களை உயர்த்தியோ தாழ்த்தியோ பரிகாரம் செய்வதற்கு எம்மைத் தூண்டுவிக்கும் ஒடுக்குமுறையான படிநிலைகளை எதிர்க்கின்றோம்.

நாங்கள் எங்களையும் மற்றவர்களையும் எவ்வாறு உணர்கின்றோம் என்பது பற்றி எம்மிடமுள்ள 'மயக்கநிலைச் சார்பு' எண்ணங்களை மாற்றியமைப்பதற்கு முயற்சிக்கின்றோம். மற்றவர்களின் நடத்தைகள் அவர்களுடைய தனித்துவத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் நோக்குவதுடன், அவர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் பால்நிலை, இனம், தேசியம், பாலியல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டல்ல.

அனைவருக்கும் நியாயமான முறையில் வாய்ப்புக்களையும் பயன்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிப்பதுடன், உள்ளடக்கப்பட்ட, ஒத்துழைப்புடன் கூடிய, அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலான சூழலையும் பேணி வளர்க்கின்றோம். MenEngage Alliance இன் எமது வலையமைப்புக்களிலும், நிறுவனங்களிலும் நபர்களின் நிலைப்பாடு எதுவாயினும், அவற்றைக் கருத்திலெடுக்காது அவர்களுடன் சமமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் உறவுமுறையை பேணுவதற்கு முயற்சிக்கின்றோம்.

4. விழுமிய ரீதியாக தீர்மானம் எடுத்தல்

எமது தீர்மானங்கள் மக்களதும் மற்றும் பூமியினதும் உயரிய நலன் சார்ந்ததாகவே அமைவதுடன், மாறாக தனிப்பட்ட நலன்களைக் கருத்தில் கொண்டதாக அல்ல. எமது தீர்மானங்கள் எங்களுடைய கூட்டான செயற்பாடுகளிலும் மற்றும் தூரநோக்கத்திலும் தாக்கம் செலுத்துகின்றது. எமது தீர்மானங்கள் மனித சமுதாயமற்ற சமூகங்கள் உள்ளிட்ட, பல்வேறு வகையில் ஒடுக்கப்பட்டதும் மற்றும் ஓரங்கட்டப்பட்டதுமான சமூகங்கள் மீது தாக்கம் விளைவிக்கின்றமையை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

விழுமிய ரீதியான சங்கடங்களுக்கு முகங்கொடுக்கும் போது, நாங்கள் மற்றவர்களுடன், எமது சக ஊழியர்கள் மற்றும் தலைவர்கள், மற்றும் ஏனைய ஏற்புடைய பெண்ணியவாத தலைவர்கள் மற்றும் நிபுணர்களிடம் அதுதொடர்பான கருத்துக்களைக் கேட்டறிகின்றோம்.

எமது பூமியைப் பாதுகாக்கும் வகையிலும், எமது நிதியைப் பாதுகாக்கின்ற வகையிலும் வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கின்றோம். நாம் இரகசியம் பேணப்பட வேண்டிய தகவல்களை மிகவும் முக்கியமானதாகக் கருதுவதுடன், அவற்றைப் பொறுப்புடன் பாதுகாக்கின்றோம்.

5. வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை

நாம் மற்றவர்களுடன் மேற்கொள்கின்ற தொடர்பாடலில் நேர்மையைக் கடைப்பிடிக்கின்றோம். எமது திட்டங்கள், ஈடுபாடுகள் மற்றும் தீர்மானங்களில் வெளிப்படைத்தன்மையுடன் இயங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம். இயலுமானவரை, நாம் நிதியனுசரணை மூலங்கள், ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மற்றும் செலவினங்களை பொதுவில் வெளிப்படுத்துகின்றோம்.

MenEngage Alliance இன் வலையமைப்பு மற்றும் எமது நிறுவனங்கள் பற்றிய சரியான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு முயற்சிக்கின்றோம். நாம் எமது தவறுகளை அடையாளங் காண்பதுடன், எமது தவறுகளுக்காக மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதைத் தவிர்க்கின்றோம். நாம் எதையேனும் ஒப்புக்கொள்கின்றோமாயின், அதற்கான விளக்கத்தை வழங்குகின்றோம்.

ஏற்படக் கூடிய ஒழுங்கீனங்கள், முறைப்பாடுகள், அல்லது பிரச்சினைக்குரிய நடத்தைகள் தொடர்பான கரிசினைகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வதுடன், மற்றவர்கள் மீது ஒருபோதும் பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில்லை. அதனுடன் தொடர்புபடுகின்ற அனைவருக்கும் நியாயத்தையும் நியாயமான செயன்முறைக்காகவும் ஆதரித்து செயலாற்றுகின்றோம்.

சாத்தியமான அக்கறைசார் முரண்பாடுகள் இருப்பின், தாமதமின்றி அவற்றுடன் தொடர்புடைய மக்களுக்கு வெளிப்படுத்தல்.

6. சுய சிந்தனையுடனான வெளிப்பாடு மற்றும் வளர்ச்சி

எமது செயற்பாடுகள் பற்றிய சுய சிந்தனையுடனான விமர்சனங்களை வெளிப்படுத்துவதற்கு விரும்புவதுடன், எமது தொடர்புகள் மற்றும் தீர்மானங்களை மதிப்பீடு செய்வதற்கும், தவறுகளைக் கலந்துரையாடுவதற்கும் அவற்றிலிருந்து கற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் மற்றவர்கள் வழங்கும் பின்னூட்டல்களை செவிமடுப்பதற்கும், மற்றும் அதற்கமைய செயற்படுவதற்கும் முயற்சிக்கின்றோம்.

ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடன் செயலாற்றும் போது, ஆணாதிக்க அதிகாரம் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய சுய சிந்தனையுடன் கூடிய வெளிப்பாட்டை ஊக்குவிப்பதுடன், அதனை எம்மிடமும் எதிர்பார்க்க வேண்டும். எமது உள்ளார்ந்த சுய பயிற்சிகள் ஆணாதிக்கத்தை சவால் விடுப்பதற்கும் மற்றவர்களிடத்தில் சென்றடைவதற்குமான அடித்தளமாக அமைகின்றது.

சுய சிந்தனையுடனான வெளிப்பாடு, தனிநபர் மற்றும் கூட்டுப் பாதுகாப்புடன் தொடர்புபடுவதுடன், புதிய அறிவாற்றல் மற்றும் விருத்திக்கான தளத்தை உருவாக்குகின்றது.

7. உயரிய கூட்டுப் பொறுப்புணர்வு

தவறொன்றைக் காணும் போது அல்லது சந்தேகிக்கும் போது, அதனைக் கண்டும் காணாதது போல் இருக்கமாட்டோம். அதனால் மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படக் கூடும் என்பதால், மௌனமாக இருத்தல் குற்றத்திற்கு உடந்தையாக இருப்பதற்கு சமமானதாகும். தீமைபயக்கும் நிறுவன நடைமுறைகள் அல்லது தனிநபர்களுடைய செயற்பாடுகள் தொடர்பாக நாங்கள் கரிசனை கொண்டிருப்பதுடன், தவறான செயற்பாடுகளால் பாதிப்புக்குள்ளாகிய நபர் (அல்லது நபர்களுடன்) மதியுரைகளைக் கேட்டறிந்து கொள்ள முடிவதுடன், மற்றும்/அல்லது அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காக அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபரை அணுகவும்.

மாற்று வழிமுறையாக, பாதிப்புக்குள்ளாகிய நபர் சம்மதம் தெரிவித்தால், ஏற்புடைய நிறுவனங்களுக்கு/சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கும் பிரச்சினையை முன்வைக்கலாம். நீதியை நிலைநாட்டல் மற்றும் பொறுப்புக் கூறலை மேம்படுத்தும் கரிசனைகளை அதிகரித்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுடன் கூட்டுப் பொறுப்புணர்வுடன் செயலாற்றல் அவசியமாகும்.

## MenEngage அங்கத்தவர்கள் ஈடுபடக் கூடாத நடத்தைகள்

1. துர்நடத்தை

அச்சுறுத்தல், முரட்டுத்தனம், விருப்பமற்ற, தண்டனைக்குரிய குற்றம், இழிவுபடுத்தும் செயல், மற்றும் எந்தவொரு தீங்கிழைக்கும் நடத்தைகளும் இதில் அடங்கும்.

துன்புறுத்தல், அநாகரிகமான செயல்கள், திடீர் கோபம், வாய்மூல மற்றும் உடல் ரீதியான வன்முறைகள் மற்றும் திருப்பித் தாக்குதல் போன்றன துர்நடத்தைகளுக்கான உதாரணங்களாகும். அத்துடன், மற்றவர்களை இழிவுபடுத்தும் வகையிலான மனப்பாங்கு, அவர்களுடைய எண்ணங்களைத் தட்டிக்கழித்தல், இழிவான உடல் மொழிகள், புறம்பேசுதல் மற்றும் கடுமையான விமர்சனங்களைக் காட்டல் போன்ற நுட்பமான முறைகளிலும் அவ்வாறான துர்நடத்தைகள் வெளிப்படுத்தப்படலாம்.

2. பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் சுரண்டல்

பாலியல் துன்புறுத்தல், பாலியல் துஷ்பிரயோகம், மற்றும் பாலியல் சுரண்டல் போன்றவற்றில் காணப்படும் பொதுவான விடயமாவது, இரண்டு தரப்பினர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களிடையே அதிகாரம் சமமற்ற வகையில் இருப்பதால், அதிகாரம் முறையற்ற விதத்தில் பிரயோகிப்படுவதுடன், அவை விருப்பு ஒப்புதலின் குறைபாட்டை மேலும் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமையலாம்.

பாலியல் துன்புறுத்தல்கள் என்பது, விரும்பத்தகாத பாலியல் அழைப்புக்கள், பாலியல் இச்சைகளுக்கான வேண்டுகோள்கள் மற்றும் பாலியல் ரீதியான வாய்மூல மற்றும் உடல் ரீதியான துன்பறுத்தல்கள் போன்றனவாகும். ஒரு நபரின் பாலினம், பால்நிலை, பாலியல் நோக்குகள், பால்நிலை அடையாளம், மற்றும்/அல்லது வெளிப்படுத்தல்களை அவதூறு செய்தலும் பாலியல் துன்புறுத்தலாகும். பாலியல் துன்புறுத்தல்களுக்கு பெண்கள் அல்லது பாகுபாடுகளுக்கு இலக்காகிய வேறு நபர்கள் மீது பகைமையான வேலைச் சூழலும் பாலியல் துன்புறுத்தலில் உள்ளடங்கும். தீங்குவிழைவிக்கும் பிம்பங்கள் மற்றும் பாகுபாடு காட்டுகின்ற வகையிலான கேலிகள் மற்றும் பேச்சுக்கள் என்பனவும் துஷ்பிரயோகம் மற்றும் அவமதிப்புக்களும் இவற்றில் அடங்கும்.

*(மேலதிக விபரங்களுக்கு, MenEngage இன் பாலியல் துன்புறுத்தல்கள் பற்றிய கொள்கை மற்றும் சிறுவர்கள் மற்றும் கட்டிளம் பருவத்தினரின் பாதுகாப்பு பற்றிய கொள்கையைப் பார்க்கவும்)*

### 3. பாகுபாடு காட்டல்

பாகுபாடு காட்டல் என்பது, அவர்களின் இனம், பால்நிலை அடையாளம் மற்றும்/அல்லது வெளிப்பாடுகள், பாலியல் நோக்கு, தேசியம், வயது, மதம், இயலாமையுடன் கூடிய, அல்லது வேறெந்த இயல்புகளின் அடிப்படையில் எந்தவொரு மக்களை எதிர்மறையாக நடாத்துவதாகும். அது இனவாதம், பாலியல், ஓரினப் பாலீர்ப்பு, வகுப்பு வாதம் மற்றும் இனவெறி ரீதியான நடத்தைகள் மற்றும் மொழிப் பிரயோகங்களால் வெளிப்படும்.

தப்பான அபிப்பிராயங்களின் அடிப்படையில் நபர்களுக்கு அல்லது குழுக்களுக்கு எதிரான கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியான தீர்மானங்கள் பாகுபாடு காட்டலுக்கான உதாரணங்களாகும். ஒருசில பின்னணிகள் அல்லது பண்புகளைக் கொண்டவர்களுக்கு ஆதரவு காட்டுதல் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களிலிருந்து வருபவர்களை புறக்கணிப்பதும் மேலும் சில வகையான பாகுபாடுகளாகும்.

### 4. அக்கறைசார் முரண்பாடுகள்

இது தனிப்பட்ட ரீதியான அக்கறைகள் மற்றும் நிறுவன ரீதியான, வலையமைப்பு ரீதியான, அல்லது MenEngage Alliance இன் அக்கறைகளுடன் (அல்லது முரண்பாடுகளாக இருக்கலாம்) முரண்பாடான நிலைமைகளைக் குறிப்பிடுகின்றது. அவை கூட்டான அக்கறைகளைப் பாதிக்கின்ற வகையில் குறித்த அங்கத்தவர்களுக்கு, அல்லது அவர்களுடைய குடும்பங்கள் அல்லது நண்பர்களுக்கு நன்மை கிடைக்கும் வகையிலான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளாகும்.

MenEngage இன் நன்மதிப்பு மற்றும் செலவில் அங்கத்தவர் ஒருவருக்கு அல்லது பணியாளர் ஒருவருக்கு அவரின் நண்பர்களுக்கு அல்லது உறவினர்களுக்கு அல்லது அங்கத்துவ நிறுவனங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் நன்மை கிடைக்கும் வகையில் செயற்பட்டால், அது அக்கறைசார் முரண்பாடாக அமைவதுடன், அதனைத் தவிர்த்தல் வேண்டும்.

*(மேலதிக விபரங்களுக்கு, MenEngage இன் அக்கறைசார் முரண்பாடுகள் பற்றிய கொள்கையைப் பார்க்கவும்)*

## 5. ஊழல் மற்றும் மோசடி

ஊழல் மற்றும் மோசடி மிக்க நடத்தைகளால் அதிகாரம் முறையற்ற வகையில் பிரயோகித்தல், அல்லது நிறுவனத்தில் வகிக்கும் பதவி, தனிப்பட்ட தேவைகளுக்காக தகவல்களைப் பெறல், மற்றும் தனிப்பட்ட சுய இலாபங்களுக்காக வளங்கள் மற்றும் சேவைகளைப் பெறல் போன்றவற்றுக்கு வழிவகுக்கின்றது. தன்னிடமுள்ள அதிகாரம் மற்றும் ஆணையை தனிப்பட்ட சுய இலாபங்களுக்காக துஷ்பிரயோகம் செய்வதும் இதில் உள்ளடங்குகின்றது.

MenEngage Global Alliance சார்பாக அல்லது MenEngage இன் வலையமைப்பு அல்லது அங்கத்துவ நிறுவனம் அல்லது பணிபுரிகின்ற எந்தவொரு நபரும் இவ்வாறான நடத்தைகளைத் தவிர்த்தல் வேண்டும்.

*(மேலதிக விபரங்களுக்கு, MenEngage இன் ஊழல் மற்றும் மோசடி தடுப்புப் பற்றிய கொள்கையைப் பார்க்கவும்)*

## 6. போதைப் பொருட்களின் பாவனை

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனை ஒருவருக்கு தனிப்பட்ட ரீதியில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன், மற்றவர்களுக்கும் தீமைகளை விளைவிக்கின்றது. MenEngage Alliance இன் அங்கத்தவர் ஒருவர் இவ்வாறான போதைப்பொருட்களின் பாவனையால் பாதிக்கப்பட்டிருப்பின், அவரை தொழில்வாண்மை ரீதியான உதவிகளை நாடுவதற்கு ஊக்குவிப்போம்.

அங்கத்தவர்கள் மதுசாரம் மற்றும் போதைப்பொருட்களை பணி நேரங்களில் பாவனை செய்யாதிருத்தல் வேண்டும். அவர்கள் மதுசாரப் பாவனை செய்யும் போது சுய மதிப்பீட்டுடன் இருக்க வேண்டியதுடன், மற்றவர்களுக்க அச்சுறுத்தலான வகையிலோ அல்லது மதிப்பற்ற வகையிலோ, மற்றவர்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது சட்டத்தை மீறுவதாகவோ அமையும் வகையில் மதுசாரப் பாவனையில் ஈடுபடலாகாது.

## நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகள்

அங்கத்தவர்கள் இவ் ஆவணம் மற்றும் ஏற்புடைய கொள்கைகளை நன்கு வாசித்தறிந்து கையொப்பமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் அர்ப்பணிப்புக்களை பிரதிபலிப்பதற்காகவும் ஒருவருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும் கற்றல் வாய்ப்புக்கள் வழங்கப்படும். எந்தவொருவருக்கும் இவ் ஒழுக்கநெறிக் கோவை மீறல்கள் தொடர்பாக முறையிடலாம். Alliance இன் அனைத்துத் தலைவர்களுக்கும் மேலதிகமாக, பிராந்திய ரீதியாக பிரச்சினைகளை முன்வைப்பதற்கான நிலையங்கள் மற்றும் அநாமதேய ரீதியில் முறைப்பாடுகளை வழங்குவதற்கான துரித அழைப்பு இலக்கமும் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக வழிகாட்டல்களுக்காக Reporting a Concern பக்கத்தைப் பார்க்கவும்.

இவ் ஒழுக்கநெறிக் கோவை மீறப்படும் போது, மீள்நலனுறுத்தல் அணுகுமுறைகள் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மூலம் நிவர்த்தி செய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். நாட்டிலுள்ள சட்டத்திற்கமைய குடியியல் மற்றும் தண்டனைப் பொறுப்புக்கள் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.